www.Padasalai.Net www.CBSEtips.in

FM

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2023

**11 - ஆம் வகுப்பு** **கணினி அறிவியல்**

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 35

## பகுதி - அ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5 X 1 = 5

1. ஒரு கணிப்பொறி மீண்டும் தொடங்கும் போது எந்த வகையான தொடங்குதலைப் பயன்படுத்துகிறது?
   அ) உடன் தொடக்கம் ஆ) தன் தொடக்கம்
   இ) தொடு தொடக்கம் ஈ) மெய் தொடக்கம்
2. $1101_2$ க்கு நிகரான பதினாறுநிலை மதிப்பு யாது?
   அ) F ஆ) E இ) D ஈ) B
3. எது வேகமாக செயல்படும் நினைவகம் ஆகும்?
   அ) வன் வட்டு ஆ) முதன்மை நினைவகம்
   இ) கேச் நினைவகம் ஈ) ப்ளு ரே நினைவகம்
4. பின்வரும் எந்த இயக்க அமைப்பு வணிக ரீதியாக உரிமம் பெற்ற இயக்க அமைப்பு ஆகும்?
   அ) விண்டோஸ் ஆ) உபுண்டு இ) பெடோரா ஈ) ரெட்ஹேட்
5. விண்டோஸில் ஒரு கோப்பினை மறு பெயரிட பயன்படுத்தப்படும் குறுக்குவழி விசை
   அ) F2 ஆ) F4 இ) F5 ஈ) F6

## பகுதி - ஆ

**ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 11 கட்டாயம் விடையளிக்கவும்.** 4 X 2 = 8

6. மையச் செயலகத்தின் CPU பகுதிகள் யாவை?
7. $(65)_{10}$ க்கு நிகரான இருநிலை எண்ணாக மாற்றுக.
8. பாட்டை என்றால் என்ன? வகைகள் யாவை?
9. கணிப்பொறியில் பயன்படுத்தப்படும் பல்வேறு இயக்க அமைப்புகள் யாவை?
10. செந்தர பணிக்குறி என்றால் என்ன?
11. வேறுபடுத்துக. முதன்மை நினைவகம் மற்றும் இரண்டாம்நிலை நினைவகம்.

## பகுதி - இ

**ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 17 கட்டாயம் விடையளிக்கவும்.** 4 X 3 = 12

12. கணிப்பொறி தன்மைகள் யாவை?
13. டிமார்கன் தேற்றங்களை எழுதுக.
14. இயக்க அமைப்பின் முக்கிய சிறப்பியல்புகளை பட்டியலிடுக.
15. பல் பணியாக்கம் என்றால் என்ன?
16. மறுசுழற்சி பெட்டியை பற்றி குறிப்பு வரைக.
17. வேறுபடுத்துக CD மற்றும் DVD.

## பகுதி - ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 2 X 5 = 10

18. அ) கணிப்பொறியின் பல்வேறு தலைமுறைகளை விளக்குக. *(அல்லது)*
    ஆ) (i) கூட்டுக : $1101010_2 + 101101_2$ (ii) கழிக்க : $1101011_2 - 11010_2$
19. அ) அடிப்படை வாயில்களை அதன் கோவை மற்றும் மெய்ப்பட்டியலுடன் விளக்குக. *(அல்லது)*
    ஆ) நுண்செயலியின் பண்புக்கூறுகளை விளக்குக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com